**<u>கூடுதல் சார்பு அமர்வு நீதிமன்றம், ஒசூர்</u>**

முன்னிலை திரு. எம். ஜெயமணி, பி,ஏ., பி.எல்.,

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி, ஒசூர்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.13/2021</u>**

**CNR.No.TNKI050000362021**

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக : காவல் ஆய்வாளர்,<br>சிப்காட் காவல் நிலையம்,<br>குற்ற எண்.485/2012 |
| எதிரி | கிருஷ்ணசாமி (30/2012), த.பெ. மாரியப்பன்,<br>க.எண்.99/4, அரசனட்டி, 3வது வார்டு,<br>மூக்காண்டபப்பள்ளி அஞ்சல், ஒசூர். |
| குற்றம் | இ.த.ச. 307 பிரிவின்கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | இ.த.ச.307 பிரிவின்கீழ் |
| தீர்மானம் | எதிரி இ.த.ச 307 பிரிவின் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுகிறது. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | எதிரி இ.த.ச 307 பிரிவின் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235 (1) கு.வி.மு.ச / பிரிவு 258(1) BNSS–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | எதிரியின் பெயர் | தகப்பனார் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | சிப்காட் காவல் நிலையம், குற்ற எண். 485/2012 | கிருஷ்ணசாமி | மாரியப்பன் | டிரைவர் | ஒசூர் | 30/2012 |

| சம்பவம் நிகழ்ந்த நாள் | புகார் கொடுத்த நாள் | இறுதி அறிக்கை தாக்கல் நாள் | எதிரி காவல் படுத்தப்பட்ட நாள் | எதிரி பிணையில் சென்ற நாள் |
|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 |
| 28.12.2012 | 29.12.2012 | 10.10.2013 | 08.01.2013 | 21.01.2013 |

| முதல்நிலை விசாரணை நாள் | கு.வி.மு.ச. 228 பிரிவின்கீழ் எதிரி விசாரணை செய்யப்பட் நாள் | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | விசாரணை முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 13 | 14 | 15 | 16 |
| 09.12.2020 | 01.09.2021 | 27.10.2021 | 18.09.2025 |

| கு.வி.மு.ச.313 பிரிவின்கீழ் எதிரி விசாரணை செய்யப்பட்ட நாள் | தீர்ப்பு நாள் | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | காலதாமதத்திற்கான விளக்கம் |
|---|---|---|---|
| 17 | 18 | 19 | 20 |
| 22.09.2025 | 30.04.2026 | --- | --- |

| பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் உத்தரவு நாள் (மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்) (கு.வி.மு.ச.317 பிரிவின்கீழான மனுக்களைத் தவிர்த்து | விசாரணையின்போது எதிரி தலைமறைவாகியிருந்தால், மேற்படி எதிரி ஆஜரான/ஆஜர்ப்படுத்தப் பட்ட விபரங்கள் | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு |
|---|---|---|
| 21 | 22 | 23 |
| இல்லை | இல்லை | இல்லை |

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 11.12.2025 அன்று வந்தபோது அரசுதரப்பில் வழக்கறிஞர் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. S.சௌந்தரி அவர்கள் ஆஜரான நிலையிலும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ராஜசேகர் அவர்கள் ஆஜரான நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்புரை

**1.** கடந்த 29.12.2012ம் தேதி இரவு 12.00 மணிக்கு, சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காமராஜ் நகர், JMS Industries கம்பெனியில், எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN-20-R-2364 என்ற லாரியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்களை லோடு

ஏற்றி வந்ததாகவும், மேற்படி லாரியில் இருந்த உதரி பாகங்களை சாட்சி சரவணன் என்பவர் எண்ணிக்கை செய்து இறக்கிக்கொண்டிருந்தபோது, மேற்படி எதிரி "எனக்கு நேரம் ஆகிவிட்டது எண்ணாமல் லோடை இறக்குவதாக இருந்தால் இறக்குங்கள் இல்லையென்றால் நான் போய் நாளை வருகிறேன்" என்று சொல்லி லாரியை எடுத்து சென்றதாகவும், மேற்படி சம்பவம் குறித்து சாட்சி சரவணன் கம்பெனி உரிமையாளர் அந்தோணிசாமிக்கு போன் மூலம் தகவல் கூறியதாகவும், பின்னர் அரைமணி நேரம் கழித்து மீண்டும் லாரியை கம்பெனிக்கு எடுத்து வந்த எதிரி லோடை இறக்கும்படி கூறிவிட்டு, அங்கிருந்தவர்களை பார்த்து இந்த தேவடியா பசங்க கம்பெனிக்கு வந்தால்தான் லேட்டாகுது என்று தகாத வார்த்தையால் திட்டியதுடன், லாரியின் கதவை திறந்து உள்ளே இருந்த அருவாளை எடுத்து வந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி சாட்சி சரவணனின் இடதுபக்க கழுத்தில் வெட்டிய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 307 ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக சிப்காட் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** ஒசூர் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களால் இவ்வழக்கின் கோப்புகள் ஆராயப்பட்டு, முதல் விசாரணை வழக்கு எண்.27/2013 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜராக உத்தரவிடப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், எதிரிக்கு வழக்கு நகல்கள் வழங்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் கிருஷ்ணகிரி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள் இவ்வழக்கின் கோப்பினை அமர்வு வழக்கு எண்.13/2021 ஆக கோப்பிற்கு எடுத்து இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

**3.** இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதுரை களையும் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முதல் தோற்ற ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச.307 பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறப்பட்டபோது,

இவ்வழக்கு எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி வழக்கு விசாரணையினை எதிர்கொள்ள வேண்டியதால் அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப் பட்டது.

**4.** இந்த வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் அருவாள் சா.பொ.1 ஆக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்**

i) அ.சா.1 திரு. சரவணன் தனது முதல் விசாரணையில், கடந்த 28.12.2012 அன்று இரவு 11 மணிக்கு தான் ஜேஎன்ஜே இன்டஸ்டிரியில் சின்ன எலசகிரி காமராஜர் நகரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி டிஎன்20 ஆர் 2364 என்ற பதிவெண் கொண்ட 407 வண்டியில் டிவிஎஸ் கம்பனியில் இருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு வந்ததாகவும், நாங்கள் எப்பொழுதும் பொருட்களை எண்ணி பார்த்துவிட்டுதான் இறக்குவோம், நாங்கள் எண்ணி பார்த்துவிட்டு இறக்குவதாக சொன்னதற்கு எதிரி நேரமாகிவிட்டது, இல்லையென்றால் சென்றுவிட்டு நாளை வருகிறேன் என்று சொல்லி வண்டியை எடுத்து சென்றுவிட்டதாகவும், தான் தனது உரிமையாளர் அந்தோணிசாமிக்கு லோடு இறக்காததை பற்றி போன் செய்து சொன்னதாகவும், அவர் டிவிஎஸ் எஸ்எப்எல் கம்பெனிக்கு லோடு இறக்காததை பற்றி போன் செய்து சொன்னார் எனவும், மறுபடியும் 11.30 மணிக்கு லாரி கம்பனிக்கு வந்ததாகவும், பொருட்களை இறக்கும்படி எதிர் சொன்னதாகவும், தாங்கள் பொருட்களை கணக்கு பார்த்து இறக்கிக்கொண்டிருந்தபோது, எதிரி தேவடியா பசங்க கம்பெனிக்கு வந்தால் லேட் ஆகியது என்று தகாத வார்த்தையால் பேசியதாகவும், தாங்கள் பொருட்களை இறக்கிவிட்டதாகவும், நீ எதுவும் பேசாதே வண்டியை எடுத்து செல் என்று எதிரியிடம் சொன்னதாகவும், தான் உரிமையாளருக்கு போன் செய்து சொன்னதால் தான் எதிரியின் உரிமையாளர் திட்டியதாக சொல்லி, அவர் எடுத்து வந்த லாரியின் அவர் அமரும் இடத்தில் இருந்து அருவாள் எடுத்து வந்து இதோடு

செத்துப்போ என்று தனது இடதுபுற கழுத்தில் வெட்டியதாகவும், அதில் தனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டதாகவும், நீதிமன்றத்தில் உள்ள அருவாள்தான் எதிரி சம்பவத்தின்போது பயன்படுத்தியது எனவும், அந்த அருவாள் சா.பொ.1 எனவும், தன்னுடன் வேலை செய்பவர்கள் தன்னை இஎஸ்ஐ மருத்துவமனை ஒசூருக்கு அழைத்து சென்றதாகவும், இஎஸ்ஐ மருத்துவமனையில் முதலுதவி செய்துகொண்டு அரசு மருத்துவமனை ஒசூருக்கு சிகிச்சைக்கு சென்று, பின்னர் அங்கிருந்து செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனை பெங்களூருக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், போலீசார் தன்னிடம் விசாரித்து எழுதிக்கொண்டு கையெழுத்து வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் எனவும், அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** எனவும், சம்பவம் நடக்கும்போது இரவு சுமார் 11 1/2 லிருந்து 12 மணி இருக்கும் என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 திரு. மரியாலியோ வில்பர்ட் தனது முதல் விசாரணையில், அ.சா.1, ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் எனவும், அ.சா.1 தங்கள் கம்பனியில் புரொடக்சன் பிரிவில் வேலை பார்ப்பதாகவும், கடந்த 29.12.2012 அன்று காலை 8 மணிக்கு தான் பணிக்கு வந்தபொழுது, எதிரி, அ.சா.1யை வெட்டிவிட்டதாக சொன்னார்கள் எனவும், அதன் பின்பு 30.12.2012 அன்று காலை 08.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டு வரைபடம் வரைந்தார்கள் எனவும், தானும், ராமலிங்கம் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் எனவும், அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** எனவும், அதன் பின்பு கம்பெனிக்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் போலீசார் தேடிப்பார்த்தார்கள், ஒரு இடத்தில் முட்புதரில் வெட்டும் அருவாள் இருந்தது, அதை போலீசார் எடுத்து வந்தார்கள் எனவும், அப்பொழுது காலை சுமார் 09.30 மணியிருக்கும் எனவும், அருவாள் எடுத்து வந்ததற்கு போலீசார் எழுதிக்கொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் தானும், ராமலிங்கம் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3** என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.3 திரு. ஆரோக்கிய ராஜ், தனது முதல் விசாரணையில், அ.சா.1, ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் எனவும், கடந்த 28.12.2012 இரவு 11 மணிக்கு, எதிரி தங்கள் கம்பெனிக்கு லோடு எடுத்துக்கொண்டு வந்ததாகவும், தாங்கள் பொருட்களை எண்ணிக்கொண்டிருந்ததாகவும், தான் பொருட்களை எடுத்து சென்றுவிட்டதாகவும், அப்போது சரவணனும், எதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள் எனவும், முதலில் எதிரி தங்கள் கம்பெனிக்கு வந்துவிட்டு சென்றுவிட்டதாகவும், திரும்பவும் அவர் கம்பெனிக்கு வந்தபொழுது அ.சா.1 சொன்னதால் பொருட்களை தாங்கள் இறக்கி வைத்துவிட்டதாகவும், தாங்கள் வண்டியின் கதவை சாத்தப்பபார்த்து கொண்டிருந்ததாகவும், அப்பொழுது எதிரி வண்டியில் இருந்த அரிவாள் எடுத்து வந்து சரவணனின் இடது கழுத்தில் வெட்டி விட்டதாகவும், அப்பொழுது சுமார் 12 மணி இருக்கும் எனவும், சரவணனுக்கு கழுத்தில் இருந்து இரத்தம் வந்ததாகவும், உடனே இஎஸ்ஐ மருத்துவமனை ஒசூருக்கு சரவணனை அழைத்து சென்றதாகவும், அதன் பிறகு அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், அதன் பின்பு ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு அ.சா.1 சிகிச்சைக்கு சென்றதாக சாட்சியமளித்துள்ளார்.

iv) அ.சா.4 திரு. சதீஷ் தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரி, அ.சா.1 மற்றும் அ.சா.3ஐ தெரியும் எனவும், கடந்த 28.12.2012 அன்று இரவு 11 மணிக்கு, தங்கள் கம்பெனிக்கு உதிரி பாகங்களை எடுத்துக்கொண்டு லாரி வந்ததாகவும், ஆனால் திரும்ப சென்றுவிட்டது எனவும், மறுபடியும் அதேநாள் 11.30 மணிக்கு உதிரி பாகங்கள் தங்கள் கம்பெனிக்கு வந்ததாகவும், உதிரி பாகங்களை கணக்கிடும்படி அ.சா.1 சொன்னதாகவும், தாங்கள் கணக்கீடு செய்து பொருட்களை இறக்கிவிட்டதாகவும், வண்டிக்கு பக்கவாட்டில் அ.சா.1ம், ஆஜர் எதிரியும் நின்று கொண்டிருந்ததாகவும், தானும், ஆரோக்கியராஜ் மற்றும் பூபாலன் ஆகியோர் பொருட்களை இறக்கியதாகவும், பொருட்களை இறக்கிவிட்டதால் ஓட்டுநரை அ.சா.1 போக சொன்னதாகவும், ஆஜர் எதிரி வண்டி கதவை திறந்து கத்தியை எடுத்து வந்து அ.சா.1ஐ இடதுபக்கம் கழுத்தில் வெட்டியதாகவும், தாங்கள் எதிரியை பிடிக்க சென்றபோது, அவர் மொட்டை மாடியில் ஏறி பின்புறம் குதித்து சென்றுவிட்டதாகவும், அதன் பின்பு கம்பெனி உரிமையாளருக்கு

போன் செய்ததாகவும், முதலில் இஎஸ்ஐ மருத்துவமனை ஒசூர் அழைத்து சென்றதாக சாட்சியமளித்துள்ளார்.

v) அ.சா.5 திரு. பூபாலன் தனது முதல் விசாரணையில், அ.சா.1, ஆஜர் எதிரியை தெரியும் எனவும், கடந்த 28.12.2012 அன்று இரவு 11.00 மணிக்கு 407 வண்டி தங்கள் கம்பெனிக்கு வந்ததாகவும், உடனடியாக பொருட்களை இறக்கும்படி ஆஜர் எதிரி சொன்னதற்கு தாங்கள் முடியாது எண்ணி பார்த்துதான் இறக்க முடியும் என்று சொன்னதாகவும், அதனால் முடியாது என்று சொல்லிவிட்டு எதிரி வண்டியை எடுத்து சென்றுவிட்டதாகவும், அ.சா.1, உரிமையாருக்கு தகவல் சொன்னதாகவும், அரை மணி நேரம் கழித்து டிஎன்20ஆர்2364 வாகனம் கம்பெனிக்குள் திரும்ப வந்ததாகவும், பொருட்களை இறக்கிவிட்டதாகவும், எதிரி, அ.சா.1யை பார்த்து தேவடியா பசங்க கம்பெனியில் வந்ததால்தான் லேட் ஆகிறது என்று சொன்னதாகவும், அ.சா.1, எதிரியை வாயை மூடிக்கொண்டு போ என்று சொன்னதற்கு, எதிரி வண்டி கதவை திறந்து அருவாள் எடுத்து வந்து அ.சா.1ஐ இடது கழுத்தில் வெட்டியதாகவும், தாங்கள் அ.சா.1ஐ பார்த்ததாகவும், எதிரி சுவர் ஏறி குதித்து தப்பித்து ஓடிவிட்டார் எனவும், வழியில் வரும் வண்டியை நிறுத்தி அ.சா.1ஐ இஎஸ்ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியமளித்துள்ளார்.

vi) அ.சா.6 திரு. அந்தோணிசாமி தனது முதல் விசாரணையில், ஆஜர் எதிரியை தெரியும், அ.சா.1 தனது கம்பெனியில் சூப்பரைசராக வேலை பார்ப்பதாகவும், கடந்த 28.12.2012 அன்று இரவு 11.00 மணிக்கு அ.சா.1, தனக்கு போன் செய்ததாகவும், எதிரி டிஎன்20ஆர்2364 என்ற வண்டியில் பொருட்களை எடுத்து வந்ததாகவும், எண்ணி இறக்குவதாக இருந்தால் தான் நாளைக்கு வருவதாக சொல்லிவிட்டு எதிரி கிளம்பிவிட்டதாக தன்னிடம் சொன்னதாகவும், தான் எஸ்எப்எல் கம்பெனிக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர் எதிரிக்கு போன் செய்து பொருட்களை இறக்கும்படி சொல்வதாக சொன்னதாகவும், இரவு சுமார் 12 மணியளவில் சாட்சி ஆரோக்யராஜ் தனக்கு போன் செய்து இரவு 11.30 மணிக்கு எதிரி வண்டியை எடுத்து வந்ததாகவும், பொருட்களை கணக்கிட்டு இறக்கியதாகவும், இறக்கும்போது எதிரி,

அ.சா.1ஐ தகாத வார்த்தையால் திட்டியதாகவும், பொருட்களை இறக்கிய பின்பு அ.சா.1 சத்தம் போடாமல் கிளம்பும்படி எதிரியை சொன்னதாகவும், அதற்கு பின்பு எதிரி வண்டி கேபினை திறந்து அருவாளை எடுத்து வந்து அ.சா.1ஐ இடது புற கழுத்தில் வெட்டியதாக தன்னிடம் தகவல் சொன்னதாகவும், தான் வருவதற்குள் அ.சா.1ஐ இஎஸ்ஐ மருத்துவமனைக்கு எடுத்து சென்றிருந்தார்கள் எனவும், தான் அவரை இஎஸ்ஐ மருத்துவமனைக்கு சென்று பார்த்தபொழுது அ.சா.1ன் கழுத்தில் பஞ்சை வைத்து அழுத்தியிருந்தார்கள் எனவும், அதன் பிறகு அ.சா.1ஐ அரசு மருத்துவமனை ஒசூருக்கு அழைத்து வந்ததாகவும், அதன் பின்பு மேல் சிகிச்சைக்காக செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் வைத்து அ.சா.1க்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

vii) அ.சா.7 திரு. விஸ்வாசம் தனது முதல் விசாரணையில், கடந்த 29.12.2012 அன்று சிப்காட் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது, ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து தொலைபேசி வாயிலாக தகவல் பெற்று அரசு மருத்துவனை ஒசூருக்கு சென்று பார்த்தபோது அங்கு சரவணன், த.பெ. ஏழுமலை என்பவர் சிகிச்சையில் இருந்ததாவவும், அவர் இரவே பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாகவும் தகவல் சொன்னார்கள் எனவும், 29.12.2012 அன்று மாலை பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சரவணன் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வாக்குமூலத்தை எடுத்துக்கொண்டு ஒசூர் காவல் நிலையம் இரவு 21.00 மணிக்கு வந்து நிலைய குற்ற எண்.485/2012, இதச 294(பி), 324, 506 (2)ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** எனவும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமலத்தையும் ஒசூர் நீதித்துறை நடுவர் எண்.1க்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

viii) அ.சா.8 திருமதி.சுகந்தி (மருத்துவர்) தனது முதல் விசாரணையில், கடந்த 29.12.2012 அன்று ஒசூர் ESI மருத்துவமனையில் 24 மணி நேர பணியில் இருந்தபோது, இரவு 12.30 மணியளவில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க சரவணன், த.பெ. ஏழுமலை என்பவர் தன்னை ஜேம்ஜே இண்டஸ்ரியல் கம்பெனியில் இருந்த தெரிந்த நபர் ஒருவர் கத்தியால் அவருடைய இடதுபக்க கழுத்தில் வெட்டிவிட்டதாக ரத்த காயத்துடன் சிகிச்சைக்கு வந்ததாகவும், அவரை பரிசோதித்து அவருக்கு முதலுதவி செய்துவிட்டு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு விபத்து பதிவேட்டில் பதிவு செய்வதற்காக அனுப்பி வைத்ததாகவும், மேலும் அவரை மேல் சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ள நாராயணா இருதாலயா மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

ix) அ.சா.9 திரு. பெட்டிஇசாக் தனது முதல் விசாரணையில், கடந்த 29.12.2012ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம் காமராசர் நகர், JMJ இண்டஸ்ட்ரீசை சார்ந்த சுமார் 30 வயது மதிக்கத்தக்க சரவணன் என்ற நபரை ராமமூர்த்தி என்பவர் தங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்ததாகவும், கடந்த 29.12.2012ம் தேதி இரவு 12.00 மணியளவில் JMJ இண்டஸ்ட்ரீயில் வேலை பார்த்தபோது தான் தாக்கப்பட்டதாக கூறினார் எனவும், அவரை பரிசோதனை செய்ததில், இடது பக்க மேல்பகுதி கழுத்தில் 5 செ.மீ. x 3 செ.மீ. அளவிலான வெட்டுக்காயம் இரத்தம் வளிந்த நிலையில் இருந்ததாகவும், அவர் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து காது, மூக்கு, தொண்டை மருத்துவ பிரிவிற்கு அனுப்பி சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அவர் தங்கள் மருத்துவமனையில் கடந்த 29.12.2012 முதல் 05.01.2013 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும், நோயாளிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், Fresh in Nature என்றும் காயச்சான்று வழங்கியதாகவும், அந்த **காயச்சான்று அ.சா.ஆ.5** என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

x) அ.சா.10 முரளி தனது முதல் விசாரணையில், கடந்த 29.12.2012 அன்று தான் மத்திகிரி வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது, சிப்காட் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. விஸ்வாசம் என்பவர் பதிவு செய்து தனது புலன் விசாரணைக்கு வைத்த சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.485/2012, U/s.294 (b), 324, 506 (ii) இதச

வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.12.2012ம் ஆண்டு காலை சுமார் 08.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் மரிய லியோ வில் பிரட் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.2 மூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** எனவும், அன்றைய தினமே காலை 09.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சுமார் 25 அடி கிழக்கே உள்ள காலி இடத்தில் கிடந்த அருவாள் – 1 ஐயும், சுமார் 49 செ.மீ. நீளமுள்ள அருவாளின் கைப்பிடி சுமார் 17 செ.மீ., 37 செ.மீ. கூர்மையான பகுதியும், மரிய லியோ வில் பிரட் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், பின்னர் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பங்கள் பெற்றதாகவும், தொடர்ந்து சாட்சிகள் சரவணன், சதிஸ், பூபால், அந்தோணிசாமி, ராமமூர்த்தி ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 31.12.2012ம் தேதி வழக்கின் சட்டப்பிரிவை U/s.294 (b), 324, 506 (ii) இதசவின் கீழ் வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலங்களின் படியும், தனது புலன் விசாரணையின் படியும் U/s.294 (b), 324, 506 (ii), 307 இதசவாக சட்டப்பிரிவுகளை மாற்றி தயார் செய்ததாகவும், அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7** எனவும், தான் கைப்பற்றிய சான்று பொருட்களுக்கு படிவம் 91 தயார் செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், அந்த **படிவம் அ.சா.ஆ.8** எனவும், பின்பு அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை கடந்த 09.04.2013 அன்று ESI மருத்துவமனை மருத்துவர் திருமதி. சுகந்தி மற்றும் பெங்களூரு, செயின்ட் ஜாண்ட்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.பெட்டி இசாக் அவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர் மருத்துவர் பெட்டி இசாக் வழங்கிய காயச்சான்ற பெற்றதாகவும், பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அவர் கடந்த 31.12.2012ம் தேதி மதுரை JM 6 நீதிமன்றத்தில் சரண்டர் ஆனவரை இந்த குற்ற எண்ணில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி திரு.

விஸ்வாசம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது U/s.294 (b), 324, 506 (ii), 307 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**6.** அரசுதரப்பு சாட்சியங்களில் எதிரிக்குப் பாதகமாக அமைந்துள்ள அம்சங்களைப் பொறுத்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின்கீழ் வினவிய போது அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதன் அடிப்படையில் எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை.

**7. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில்:-**

இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**8. பிரச்சினைக்கான தீர்வு:-**

வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி மீது அ.சா.1ஆல் புகார் கொடுக்கப்பட்டு, மேற்படி புகாரின் அடிப்படையில் சிப்காட் காவல் நிலையத்தில் இ.த.ச. U/s.294 (b), 324, 506 (ii) பிரிவுகளின்கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டு, பின்னர் புலன் விசாரணை அதிகாரியால் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, எதிரி மீது இ.த.ச.307 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9. இரு தரப்பு வாதங்கள் :**

**(i) அரசு தரப்பு வாதம்**

அரசு தரப்பு வாதத்தில் கடந்த 29.12.2012ம் தேதி இரவு 12.00 மணிக்கு, சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காமராஜ் நகர், JMS Industries கம்பெனியில், எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN-20-R-2364 என்ற லாரியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்களை லோடு ஏற்றி வந்து அ.சா 1 ஐயும், அங்கு உள்ள சாட்சிகளையும் இறக்க சொன்ன போது எண்ணிக்கை செய்து தான் இறக்குவேன் என்று தெரிவிக்கவும், எதிரி மேற்படி கம்பெனியை விட்டு லாரியை எடுத்து சென்று விட்டு பின்னர், அது பற்றி அ.சா

1 , அ.சா 6 க்கு தெரிவித்து அ.சா 6 எதிரியின் கம்பெனிக்கு தெரிவிக்கவே அது பற்றி முன்விரோதம் கொண்டு மீண்டும் அதே லாரி லோடுடன் மேற்படி கம்பெனிக்கு வந்து லோடு இறக்கி கொண்டிருந்தபோது எதிரி அவரது லாரியில் வைத்திருந்த அருவாளை வைத்து கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அ.சா 1 ன் இடதுபுற கழுத்தில் வெட்டியுள்ளார். அதனால், அ.சா 1 க் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. அது பற்றி அ.சா 1 ம் 1 முதல் 6 வரையாயன சாட்சிகளும், மற்ற சாட்சிகளும் மேற்படி சம்பவத்தை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. எதிரி வெட்டப் பயன்படுத்திய அ.சா.பொ 1 ஆன அருவாளும் கைப்பற்றப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை போதிய சாட்சி மற்றும் சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளதால் , எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும் என்று கோரப்பட்டது.

**(ii) எதிரி தரப்பு வாதம்**

இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரி சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும், அ.சா 1 ம் அந்த கம்பெனியில் வேலை செய்த நபர்களும் சேர்ந்து தான் எதிரியை அடித்து கம்பெனியில் இருந்து விரட்டிவிட்டு எதிரி கொண்டு வந்த லாரியின் கண்ணாடியை சேதப்படுத்தியும் , எதிரிக்கும் அ.சா 1க்கும் ஏற்பட்ட தள்ளு முள்ளில் அ.சா 1 கீழே விழுந்தததில் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும் எதிரி அ.சா.பொ 1 ஐ வைத்து அ,சா 1 ஐ வெட்டியிருந்தால் அவரது கழுத்து துண்டாகியிருக்கும் என்றும் , அவ்வாறு எந்தவொரு கொடுங்காயமும் இல்லை என்றும், இவ்வழக்கில் அ.சா 1 முதல் 5 வரையான சாட்சிகள், அ.சா 5 கம்பெனியில் வேலை செய்வதால் அவர்கள் அனைவரும் சேர்ந்து அ.சா 1 க்கு சாதகமாக சாட்சியம் அளித்துள்ளதாவும், இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டும் அரசு தரப்பு சாட்சிகள் முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றசாட்டில் இருந்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டது.

**<u>10. தீர்வு</u>**

அரசு தரப்பு வழக்கானது கடந்த 29.12.2012ம் தேதி இரவு 12.00 மணிக்கு, சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காமராஜ் நகர், JMS Industries கம்பெனியில், எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN-20-R-2364 என்ற லாரியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்களை லோடு ஏற்றி வந்ததாகவும், மேற்படி லாரியில் இருந்த உதரி பாகங்களை சாட்சி சரவணன் என்பவர் எண்ணிக்கை செய்து இறக்கிக்கொண்டிருந்தபோது, மேற்படி எதிரி "எனக்கு நேரம் ஆகிவிட்டது எண்ணாமல் லோடை இறக்குவதாக இருந்தால் இறக்குங்கள் இல்லையென்றால் நான் போய் நாளை வருகிறேன்" என்று சொல்லி லாரியை எடுத்து சென்றதாகவும், மேற்படி சம்பவம் குறித்து சாட்சி சரவணன் கம்பெனி உரிமையாளர் அந்தோணிசாமிக்கு போன் மூலம் தகவல் கூறியதாகவும், பின்னர் அரைமணி நேரம் கழித்து மீண்டும் லாரியை கம்பெனிக்கு எடுத்து வந்த எதிரி லோடை இறக்கும்படி கூறிவிட்டு, அங்கிருந்தவர்களை பார்த்து இந்த தேவடியா பசங்க கம்பெனிக்கு வந்தால்தான் லேட்டாகுது என்று தகாத வார்த்தையால் திட்டியதுடன், லாரியின் கதவை திறந்து உள்ளே இருந்த அருவாளை எடுத்து வந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி சாட்சி சரவணனின் இடதுபக்க கழுத்தில் வெட்டி குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவு 307-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சிப்காட் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக மாண்புமிகு கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.13/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

**11.** அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் அருவாள் அ.சா.பொ.1 ஆக அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியமும் முன்னிறுத்தவும் இல்லை, அ.சா.1ஐ எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததன் மூலம் எ.ம.சா.ஆ.1

மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. (i) இவ்வழக்கில் அ.சா.1ம், புகார் கொடுத்தவருமான திரு. A. சரவணன், த.பெ. ஏழுமலை என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தில், தான் ராயக்கோட்டை ஹவுசிங் போர்டில் குடியிருந்து கொண்டு, அ.சா.6 திரு. M. அந்தோணிசாமிக்கு சொந்தமான, ஒசூர் காமராஜ் நகர் எண் 5/312– A ல் உள்ள JMJ இன்டஸ்டிரிஸ் என்ற தனியார் கம்பெனியில் சூப்பர் வைசராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 28.12.2012 ம் தேதி இரவு 11.00 மணியைபோல் தான் வேலை செய்து கொண்டிருந்தபோது, கடந்த 2 வருடங்களாக வழக்கமாக வரும் முத்து மாரியம்மன் டிரான்ஸ்போர்ட் டிரைவரான எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN 20 R 2364 என்ற கூண்டு வண்டியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்கள், ஜாப் ஒர்க்குக்காக கொண்டு வந்ததாகவும், உதிரி பாகங்களை எண்ணிக்கை செய்து கம்பெனிக்குள் அனுப்புவது வழக்கம். ஆனால் எதிரி அதை மறுத்து தனக்கு நேரமாகிவிட்டதாகவும் எண்ணிக்கை செய்யாமல் லோடை இறக்குவதாக இருந்தால் இறக்குங்கள் இல்லையென்றால் நான் போய் நாளைக்கு வருகிறேன் என்று சொல்லி வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும்,

(ii) பின்னர், தான் அதுபற்றி அ.சா.6க்கு போன் மூலம் தெரிவிக்க அவர் TVS SFL கம்பெனிக்கு தகவல் கொடுத்து மீண்டும் வண்டியை அனுப்புவதாக தெரிவிக்கவும், அன்றிரவே சுமார் 11.30 மணியைபோல், எதிரி லாரியை மீண்டும் கம்பெனிக்கு கொண்டு வந்ததாகவும், அப்போது தானும், தனது உதவியாளர் ஆரோக்கியராஜ்ஜும் இருந்ததாகவும், எதிரி லோடை இறக்கும்படி கூறி தகாத வார்த்தையால் பேசியதாகவும், பின்னர் அன்றிரவு சுமார் 12.00 மணியளவில் எதிரி இந்த தேவடியா பசங்க கம்பெனிக்கு வந்தால்தான் லேட்டாகுது என்று மீண்டும் திட்டவும், தான் லோடை இறக்கியாச்சு சத்தம் போடாமல் போ என்று சொன்னதாகவும், எதிரி, தான் முதலாளியிடம் தொலைபேசியில் சொன்னதையும், அதனால் எதிரியின் முதலாளி அவரை கண்டித்ததையும் மனதில் வைத்து எங்கள் மீது ஆத்திரம் கொண்டு வண்டியின் கதவை திறந்து உள்ளே இருந்த அருவாளை எடுத்து வந்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளால் தனது வலதுபக்க கழுத்தில் வெட்டியதால்

இரத்த காயம் ஏற்பட்டவே தனது சத்தம் கேட்டு கம்பெனியில் வேலை செய்தவர்கள் ஓடி வரவும், எதிரி தப்பித்து ஓடிவிட்டதாகவும், பின்னர் அங்கிருந்தவர்கள் ஒரு போக்கு வண்டியில் தன்னை ஏற்றிக்கொண்டு முதலில், ஒசூர் ESI மருத்துவமனைக்கும், பின்னர் ஒசூர் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு அழைத்து சென்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றும், அங்கு சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்தபோது சிப்காட் போலீசார் தன்னை விசாரித்து அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் பெற்றதாக கூறியுள்ளார்.

13. (i) இவ்வழக்கில், அ.சா.1ம், புகார் வாக்குமூலமும் கொடுத்தவரான திரு. A. சரவணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தில், தான், அ.சா.6 திரு. M. அந்தோணிசாமி என்பவருக்கு சொந்தமான, ஒசூர் காமராஜ் நகர் எண் 5/312– A ல் உள்ள JMJ இன்டஸ்டிரிஸ் என்ற தனியார் கம்பெனியில் சூப்பர் வைசராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 28.12.2012–ம் தேதி இரவு 11.30 மணியைபோல், மேற்படி கம்பெனியில் தான் வேலையில் இருந்த போது இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாகவும் அதற்காக தான் பெங்களுரு செயிண்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் கொடுத்தாகவும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் கூறி புகார் வாக்குமூலத்திலுள்ள அவரது கையெழுத்தை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அதேபோல் அ.சா.6ம் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், மேற்படி JMJ இன்டஸ்டிரிஸ் என்ற தனியார் கம்பெனி தன்னுடையது என்றும், அதில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகளும் வேலை செய்து வருவதாகவும், இவ்வழக்கின் சம்பவம் கடந்த 28.12.2012 ம் தேதி இரவு 11.30 மணியைபோல் நடந்ததாகவும், அதுபற்றி அ.சா.1, தனக்கு போன் செய்து கூறியதாக அ.சா 6 , அ.சா 1 ன் சாட்சியத்தை உறுதியூட்டி இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்ற JMJ இன்டஸ்டிரிஸ் கம்பெனி பற்றியும், அது தனக்கு சொந்தமானது என்பது பற்றியும், சம்பவம் பற்றியும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல், அ.சா 2 முதல் 5 வரையான சாட்சிகள் அ.சா 1 , அ.சா 6

சொன்னதை போல கூறி சம்பவம் நடந்த இடத்தை பற்றியும், சம்பவம் பற்றியும் கூறி உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iii) அதேபோல், இவ்வழக்கில், அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்த அ.சா.7 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. விசுவாசம் அவர்கள், அவரது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 29.12.2012 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து தொலைபேசி வாயிலாக தகவல் பெற்று, மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, காயம்பட்ட அ.சா.1 சரவணன் மேல் சிகிச்சைக்காக, அன்றிரவே பெங்களுரு செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் அறிந்து அங்கு சென்று அ.சா.1 ஐ விசாரித்து, அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து, 09.00 மணியைபோல், சிப்காட் காவல் நிலைய குற்ற எண் 485/2012 இதச பிரிவுகள் 294 (பி), 324, 506(ii) இதச வின் கீழ் அ.சா.ஆ 4 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கின் கோப்புகளை புலன் விசாரணைக்காக அ.சா.10ன் பார்வைக்கு வைத்ததாக கூறி அ,சா 1 யிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்றதையும், அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டதையும் உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) மேலும், இவ்வழக்கின் சம்பவ இடம், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா 2 மரியா லியோ வில்பர்ட் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், தான் அ.சா.6 க்கு சொந்தமான கம்பெனியில், அ.சா 1 உடன் குவாலிட்டி இன்சார்ஜாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 30.12.2012 ம் தேதி காலை 8.30 மணியைபோல், சிப்காட் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து, பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் தானும் ப.சா 3 ராமலிங்கம் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், அ.சா.ஆ.2 ஆன பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் கோப்புகளை அ.சா.7 யிடம் இருந்து பெற்று புலன் விசாரணை செய்த அ.சா.10 காவல் ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு கடந்த 30.12.2012–ம் தேதி காலை

சுமார் 8.00 மணியைபோல் சம்பவ இடம் சென்று, அ.சா 2 மற்றும் ப.சா 3 ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 2 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ 3 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டதாக கூறியும் அ.சா 1, அ.சா 2, அ.சா 7 உறுதியூட்டியும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) ஆனால், எதிரி தரப்பில், எதிரி சம்பவத்தன்று இரவு 11.30 மணியைபோல், அ.சா 1 வேலை செய்யும் கம்பெனிக்கு போகவில்லை என்றும், அங்கு வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறி வாதம் முன்வைக்கப்பட்டது. **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 11 அயலிடைவாதம் (அ) வேற்றிடைவாதம் – ஒருவர் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இல்லை என்றும், நெடுந்தொலைவில் இருந்ததாகவும் நிரூபிக்க வேண்டும் என்றும் கூறுகிறது.** அவ்வாறு எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை பொறுத்து வழக்கின் துவக்க நிலையிலேயே முன்வைத்திருக்க வேண்டும் அல்லது வழக்கு விசாரணையின் போதாவது உரிய ஆள் மற்றும் ஆவணச்சாட்சியுடன் மறுத்திருக்க வேண்டும். அதேபோல், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101– ஒருவர் ஒன்னைச் சொல்கிறார். அவரே அதை நிரூபிக்க வேண்டும். இதுவே, நிரூபிக்கும் சுமை அவரையேச் சார்ந்தது ஆகும். அந்த வகையில் எதிரி முன் வைத்த வாதமான **சம்பவ இடத்தில் வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது** என்றும், வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதை நிரூபிக்க எந்தவொரு சாட்சியத்தையும் , சான்றாவணத்தையும் முன்நிறுத்தவும் இல்லை, தாக்கல் செய்யவும் இல்லை. மேற்படி அரசு தரப்பு வழக்கை மறுப்பதற்கு எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் எதிரி தரப்பில் நிருபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) மேற்கண்டவாறு, அ.சா.1, முதல் அ.சா.7 மற்றும் அ.சா 10 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை வைத்து பார்க்கும்போது, இவ்வழக்கில் கடந்த 28.12.2012 ம் தேதி இரவு 12.00 மணியைபோல், ஒசூர் காமராஜ் நகர் எண் 5/312– A ல் உள்ள JMJ இன்டஸ்டிரிஸ் என்ற தனியார் கம்பெனிக்கு, முத்து மாரியம்மன் டிரான்ஸ்போர்ட்

டிரைவரான எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN 20 R 2364 என்ற கூண்டு வண்டியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்கள், ஜாப் ஓர்க்குக்காக கொண்டு வந்ததையும், அப்போது இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றுள்ளது என்பதையும், அதனால் அ.சா.1 செயிண்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவரை அ.சா.7 விசாரித்து அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் பெற்றதையும், அதனடிப்படையில் அ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதையும் அரசு தரப்பில் போதிய சாட்சி சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. (i) இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரி கிருஷ்ணசாமி என்பவர் TN 20 R 2364 என்ற கூண்டு வண்டியில் TVS SFL கம்பெனி உதிரி பாகங்களை , ஜாப் ஓர்க்குக்காக மேற்படி JMJ இன்டஸ்டிரிஸ் கம்பெனிக்கு கொண்டு வந்ததாகவும் அதை எண்ணாமல் லோடை இறக்க மாட்டோம் என்று அ.சா 1 சொல்லவே , எதிரி மேற்படி வண்டியை எடுத்துகொண்டு சென்று விட்டதாவும், பின்னர், தான் அதுபற்றி அ.சா.6க்கு போன் மூலம் தெரிவிக்க அவர் TVS SFL கம்பெனிக்கு தகவல் கொடுத்து மீண்டும் வண்டியை அனுப்புவதாக தெரிவிக்கவும், அன்றிரவே சுமார் 11.30 மணியைபோல், எதிரி லாரியை மீண்டும் கம்பெனிக்கு கொண்டு வந்ததாகவும் , தான் முதலாளியிடம் தொலைபேசியில் சொன்னதையும், அதனால் எதிரியின் முதலாளி அவரை கண்டித்ததையும் எதிரி மனதில் வைத்து எங்கள் மீது ஆத்திரம் கொண்டதாகக் கூறி புகார் வாக்குமூலம் கொடுத்து அவ்வாறே அ.சா 1 அவரது நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியுள்ளார்.

(ii) ஆனால் அ.சா 1 அவரது நீதிமன்ற குறுக்கு விசாரணையில் எதிரி சுமார் 2 வருடங்களாக எங்கள் கம்பெனிக்கு பொருட்களை எடுத்து கொண்டு வந்து செல்வதாகவும், இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக தனக்கும் எதிரிக்கும் எந்த தகராறும் முன்விரோதமும் இல்லை என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா 2 மரியாலியோ வில்பர்ட் அவரது நீதிமன்ற விசாரணையில் எதிரியை வருடக்கணக்காக தெரியும்

என்றும் அவர் தங்கள் கம்பெனிக்கு பொருட்களை எடுத்து கொண்டு வந்து கொடுப்பதாகவும், இந்த சம்பவத்திற்கும் முன்பு எதிரிக்கும் எங்கள் நிறுவன ஊழியருக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல், அ.சா 3 ஆரோக்கிய ராஜ் , அ.சா 4 சதீஷ் , அ.சா 5 பூபாலன், அ.சா 6 அந்தோணி சாமி ஆகியோர்களும் அவரது நீதிமன்ற விசாரணையில், அ.சா 1, அ.சா 2 சொன்னதை போல கூறி எதிரிக்கும் தங்கள் கம்பெனி ஊழியருக்கும் முன் விரோதம் எதுவும் இல்லை என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iii) இருந்தபோதிலும், **இந்திய தண்டனை சட்டம் பிரிவு 307** ன் உட்கூறுகளானது எவரேனும் , ஏதாவதொரு செயலைச் செய்து மரணம் விளைவித்ததற்காக கொலை குற்றவாளி ஆவாரோ, அத்தகைய செயலை **உள்நோக்கத்துடன்** (அல்லது) **தெரிதலுடன்** மற்றும் அத்தகைய சூழ்நிலையின் கீழ் ஒருவருக்கு காயத்தை விளைவித்தல் கொலை முயற்சி ஆகும் – என்று கூறுகிறது. மேற்படி அ.சா 1 க்கும் எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எந்தவொரு முன் விரோதம் எதுவும் இல்லை என்ற போதும், எதிரியின் கீழ்கண்ட செயல் மற்றொருவருக்கு மரணத்தை விளைவிக்கும் அளவிற்கு காயத்தை ஏற்படுத்தும் என்பது தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே, **எதிரியின் செயலில் உள்நோக்கம் மட்டுமே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த செயலால் ஏற்படும் விளைவு பற்றி தெரிதலே போதுமானது என்று மேற்படி பிரிவின் உட்கூறுகளின் மூலம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.**

15. (i) இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் , எதிரி கடந்த 28.12.2012 இரவு 11.00 மணியைபோல் மேற்படி லாரியில் TVS SFL கம்பெனியில் உதிரி பாகங்களையும், ஜாப் ஓர்க்குக்காக தாங்கள் வேலை செய்யும் கம்பெனிக்கு கொண்டு வந்து , எதிரி மேற்படி பொருட்களை எண்ணிக்கை செய்யாமல் லோடை இறக்க கோர, அதை மறுத்ததால், எதிரி மேற்படி லாரியை எடுத்து கொண்டு சென்று விட்டு பின்னர், அன்றிரவு 11.30 மணியைபோல் மீண்டும் எதிரி லாரியை கொண்டு அதில் உள்ள லோடை இறக்கும் படி கூறி, தகாத வார்த்தையால் பேசியதாகவும், பின்னர் வண்டியின்

கதவை திறந்து உள்ள இருந்த அ.சா.பொ 1 ஆன அருவாளை எடுத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று தனது இடது பக்க கழுத்தில் வெட்டியதால், இரத்த காயம் ஏற்படவே, தனது சத்தம் கேட்டு கம்பெனியில் வேலை செய்தவர்கள் ஓடி வரவும் எதிரி அங்கிருந்து தப்பித்து ஒடி விட்டதாகவும், பின்னர் போக்கு வண்டி மூலம் ஒசூர் ESI மருத்துவமனைக்கும் , அதன் பின்னர் ஒசூர் அரசு மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக பெங்களுரு செயிண்ட் ஜார்ஜ் மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றதாகவும் கூறி அவ்வாறே அவரது நீதிமன்ற சாட்சியத்திலும் கூறி அ.சா. பொ 1 ஆன அருவாளை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அதேபோல், இவ்வழக்கின் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் முன்நிறுத்தப்பட்ட அ.சா 3 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி 28.12.2012 ம் தேதி இரவு 11.00 மணியைபோல் எங்கள் கம்பெனிக்கு லோடு எடுத்து வந்து இறக்காமல் சென்று விட்டதாகவும், திரும்பவும் அவர் கம்பெனிக்கு வந்து பொருட்களை இறக்க சொன்னதால் பொருட்களை இறக்கி கொண்டிருந்தபோது , எதிரி வண்டியில் இருந்த அருவாளை எடுத்து வந்து அ.சா 1 ன் இடது பக்க கழுத்தில் வெட்டி விட்டதாகவும், அப்போது நேரம் இரவு சுமார் 12.00 இருக்கும் என்றும், எதிரி வெட்டியதால், அ.சா 1 க்கு இரத்தம் வரவே அவரை ஒசூர் ESI மருத்துவமனைக்கும் , அதன் பின்னர் ஒசூர் அரசு மருத்துவமனைக்கும் பின்னர், மேல்சிகிச்சைக்காக பெங்களுரு செயிண்ட் ஜார்ஜ் மருத்துவனைக்கும் , சிகிச்சைக்கு அழைத்து சென்றதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா 3, அ.சா 4, அ.சா 5 ஆகிய சாட்சிகளும், அவர்களது நீதிமன்ற விவாரணையில் அ,சா 1, அ.சா 2 சொன்னதை போல கூறி அவர்களது சாட்சியங்களை ஒத்துரைத்து உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iii) மேற்படி அ.சா 1 முதல் 5 வரையான சாட்சிகள் வேலை செய்யும் JMJ இன்டஸ்டிரிஸ் கம்பெனியின் உரிமையாளரான அ.சா 6 ம் மேற்படி சம்பவம் குறித்து

போன் மூலம் கேட்டு தெரிந்து கொண்டு பின்னர ESI மருத்துவமனையில் அ.சா 1 சிகிச்சை பெற்ற போது பார்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக பெங்களூரு செயிண்ட் ஜார்ஜ் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக கூறி அ.சா 6 ம் அ.சா 1 முதல் 5 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா 2 ம் அ.சா 6 சொன்னதை போல இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விப்பட்டு விசாரித்து தெரிந்து கொண்டு அ.சா 1 ஐ செயிண்ட ஜார்ஜ் மருத்துவமனைக்கு சென்று பார்த்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கில் அ,சா 1 க்கு சிகிச்சை அளித்த ஒசூர் ESI மருத்துவமனை மருத்துவரான அ.சா 8 திருமதி. சுகந்தி அவர்கள் அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 29.12.2012 ம் தேதி இரவு 12.30 மணியைபோல் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்த போது அ.சா 1 ஐ சிகிச்சைக்காக அழைத்து வந்தவரை விசாரித்த போது அவர் தெரிந்த ஒரு நபர் ஒசூர் JMJ இன்டஸ்டிரியல் கம்பெனியில் வைத்து கத்தியால் இடது பக்க கழுத்தில் வெட்டியதாக கூறியதாகவும், அவரை பரிசோதித்து முதலுதவி செய்தும், மேல்சிகிச்சைக்காக அனுப்பியதாக கூறியுள்ளார். அதேபோல், அ்.சா 1 க்கு மேல் சிகிச்சை வழங்கிய பெங்களூரு செயிண்ட் ஜார்ஜ் மருத்துவமனை மருத்துவர் அ.சா 9 திரு. பெட்டிஇசாக் என்பவர் அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 19.12.2012 ம் தேதி அதிகாலை 2.00 மணியைபோல் பணியில் இருந்த போது அ.சா 1 சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டவரை, விசாரிக்க அவர் சம்பவம் பற்றி மேற்படி அ.சா 8 யிடம் சொன்னதை போல கூறியதாகவும் அவரை பரிசோதிக்க இடது பக்க கழுத்தில் 5 Cm x 3 Cm அளவிலான வெட்டுக்காயம் இரத்தம் வழிந்த நிலையில் இருந்ததாகவும், பின்னர் அவரை உள்நோயாளியாக அனுமதித்து 29.12.2012 முதல் 05.01.2013 வரை சிகிச்சை வழங்கியதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்து அ.சா.ஆ 5 காயச்சான்று வழங்கியதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(v) இவ்வழக்கில் அ.சா 7 யிடம் இருந்து வழக்கின் கோப்புகளை பெற்ற இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா 10 காவல் ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் ( தற்போது காவல் உதவி ஆணையர் , சேலம்) அவர்கள் வழக்கின் கோப்புகளை பெற்று புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 30.12.2012 ம் தேதி காலை 8.30 மணியைபோல் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அ.சா 2 மரியாலியோ வில்பர்ட் மற்றும் ப.சா 3 திரு. ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 2 ஆன பார்வை மகஜர் அ.சா.ஆ 6 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்து அன்றைய தினமே காலை 9.30 மணியைபோல் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 25 அடி கிழக்கே உள்ள காலி இடத்தில் சுமார் 12 செ.மீ கைப்பிடியும் 37 செ.மீ கூர்மையான பகுதியும் கொண்ட மொத்தம் 49 செ.மீ உள்ள அ.சா.பொ 1 ஆன அருவாளை கைப்பற்றி அதற்கு அ.சா.ஆ 3 ஆன கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து , கைப்பற்றிய அ.சா.பொ 1 க்கு அ.சா.ஆ 8 ஆன படிவம் 91 தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(vi). மேற்படி, அ.சா 10 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா 2 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்ததையும் சம்பவ இடத்தில் வைத்து தனது மற்றும் ப.சா 3 முன்பாக அ.சா.ஆ 2 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ 6 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்ததையும் சம்பவ இடத்தின் அருகே முட்புதரில் கிடந்த அ.சாபொ 1 ஆன அருவாளை கைப்பற்றியதையும் அதற்கு அ.சா.ஆ 3 ஆன கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததையும், அதில் உள்ள அவரது கையொப்பங்களை அடையாளப்படுத்தியும் அ.சா.பொ 1 ஐ அடையாளப்படுத்தியும், அ.சா 1 மற்றும் அ.சா 10 ன் சாட்சியங்களை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) . ஆனால் எதிரி தரப்பில் , அ.சா 1 ம் கம்பெனியில் வேலை செய்த நபர்களும் சேர்ந்து தான் எதிரியை அடித்து கம்பெனியில் இருந்து விரட்டிவிட்டு எதிரி கொண்டு வந்த லாரியின் கண்ணாடியை சேதப்படுத்தி , எதிரிக்கும் அ.சா 1 மற்றும் கம்பெனியில்

வேலை செய்த நபர்களுக்கும் ஏற்பட்ட தள்ளு முள்ளில் அ.சா 1 கீழே விழுந்தததில் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும் எதிரி அ.சா.பொ 1 ஐ வைத்து அ,சா 1 ஐ வெட்டியிருந்தால் அவரது கழுத்து துண்டாகியிருக்கும் என்றும் , ஆனால் அவ்வாறு பலத்த காயம் எதுவும் இல்லை என்று கூறியும், அதேபோல் அ.சா 1 முதல் 5 வரையான சாட்சிகள் ஒரே கம்பெனியில் வேலை செய்வதால், அ.சா 2 முதல் 5 வரையான சாட்சிகளும் , மேற்படி கம்பெனியின் உரிமையாளரான அ.சா 6 ம் அ.சா 1 க்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிப்பதாகவும், இவ்வழக்கில் மேற்படி லாரியை சான்று பொருளாக சேர்க்கவில்லை என்றும் எதிரி பொருள் ஏற்றி வந்த லாரியான TN 20 R 2364 என்ற லாரியின் டிரிப் ஷீட்டின் நகலான எ.சா.ஆ 1 ஐ தாக்கல் செய்தும் மேற்படி லாரியின் 3 எண்ணிக்கை புகைப்படங்களை எ.சா.ஆ 2 ஆகவும், தாக்கல் செய்து எதிரி சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும் , எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் அ.சா 1 க்கு ஏற்பட்ட காயம் இவ்வழக்கின் எதிரால் ஏற்படுத்தப்படவில்லை என்று கூறி வாதம் முன்வைக்கப்பட்டது.

(viii). மேற்படி, எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை நிருபிக்க எதிரி தரப்பில் எந்தவொரு ஆள் சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை. மேலும், அ.சா 1 ன் குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்ட எ.சா.ஆ 1 ஆன டிரிப்ட் ஷீட்டின் நகலையும் , எ.சா.ஆ 2 ஆன 3 எண்ணிக்கை கொண்ட லாரியின் புகைப்படங்களையும் வைத்து பார்வையிடும் போதும், அதேபோல் அ.சா 1 ம் அவரை சார்ந்தவரும் எதிரியை அடித்து கம்பெனியில் இருந்து விரட்டி விட்டதாகவும், வண்டியை சேதப்படுத்தியதாகவும், அதில் ஏற்பட்ட தள்ளு முள்ளில் தான் அ.சா 1 க்கு காயம் எற்பட்டதாகவும் கூறி எழுப்பபட்ட எதிர் வாதத்தையும் எதிரி தானக முன்வந்து நீதிமன்றத்தில் சரண்டர் ஆனதையும் வைத்து பார்க்கும் போது எதிரி சம்பவத்தின் போது சம்பவ இடமான JMJ இன்டஸ்டிரியல் கம்பெனிக்கு சென்றதும் அங்கு வைத்து அ.சா 1 க்கு காயம் ஏற்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

(ix). மேலும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா 1 அவரது புகார் வாக்குமூலத்திலும் நீதிமன்ற சாட்சியத்திலும் எதிரி லாரியில் அவர் அமரும் இடத்தில் இருந்து அ.சா.பொ 1 ஆன அருவாளை எடுத்து வந்து இத்தோடு செத்து போடா என்று இடதுபுற கழுத்தில் வெட்டியதாக கூறி அ.சா.பொ 1 ஆன அருவாளை நீதிமன்றத்தில் வைத்து அடையாளங்காட்டி சாட்சியம் அளித்துள்ளதையும், அதேபோல் அ.சா 1 ன் சாட்சியத்தை உறுதியூட்டி அ.சா 3 முதல் 5 வரையான சாட்சிகளும் , இவ்வழக்கு சம்பவத்தை கேள்விபட்டு விசாரித்து தெரிந்து கொண்ட அ.சா 2 மற்றும் அ.சா 6 சாட்சிகளின் சாட்சியங்களையும் அதேபோல் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா 10 அவரது புலன் விசாரணையின் தொடர்ச்சியாக 30.12.2012 ம் தேதி காலை 9.30 மணியைபோல் சம்பவ இடத்தில் வைத்து அ.சா 2 மற்றும் ப.சா 3 ஆகியோர் முன்னிலையில் அ.சா.பொ 1 ஐ அ.சா.ஆ 3 ஆன கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி அதற்கு படிவம் 91 தயார் செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாக கூறி அ.சா 1 முதல் 6 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளதையும், மேலும் அ.சா 1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களான அ.சா 8 மற்றும் அ.சா 9 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களையும் வைத்து பரிசீலிக்கும் போது அ.சா 1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதும், அந்த காயம் இந்த வழக்கின் எதிரியால் அ.சா.பொ 1 ஐ வைத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், அரசு தரப்பில் உரிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) . இவ்வழக்கில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும் அ.சா 1 க்கு சிகிச்சை அளித்த அ.சா 8 ,9 மருத்துவர்களில் அ.சா 9 வழங்கிய அ.சா.ஆ 5 ஆன காயச்சான்றில் அ.சா 1 க்கு இடது பக்க கழுத்தில் 5Cm X 3Cm அளவிலான வெட்டுக்காயம் இருந்ததையும் அதற்காக 29.12.2012 முதல் 05.01.2013 வரை சிகிச்சை வழங்கப்பட்டதையும் அந்த காயம் கொடுங்காயம் என்பதையும் அரசு தரப்பில் உரிய சாட்சி சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளது. அதேபோல் அ.சா.பொ 1 ஆன ( சுமார் 12 செ.மீ கைப்பிடியும் 37 செ.மீ கூர்மையான பகுதியும் உடைய ) 49 செ.மீ நீளமுள்ள அருவாளானதும் கொடும் ஆயுதம் என்ற வகைப்பாட்டின் கீழ் வருகிறது.

மேலும், ஒரு மனிதனின் கழுத்து பகுதியானது மிகவும் மென்மையான பகுதியாகும் அதில் சிறு தாக்குதலுக்கு உள்ளானாலும் உடனடி உயிர் இழப்பை ஏற்படும் என்பது ஒரு நபருக்கு சாதாரணமாகவே தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. மேலும் எதிரிக்கு சம்பவத்தின் போது சுமார் 30 வயதுக்கு மேல் உள்ளதும் அவர் TVS SFL கம்பெனி உதிரி பாகங்கள் ஏற்றி செல்லும் லாரியின் ஓட்டுநராக இருந்துள்ளார். அந்த வகையில் எதிரிக்கு மேற்படி அ.சா.பொ 1 ஐ வைத்து ஒரு நபரின் கழுத்தில் வெட்டினால் உடனடி உயிர் இழப்பை ஏற்படுத்தும் என்ற அறிவுடன் நன்கு தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அந்த வகையில் எதிரி தெரிந்தே மேற்படி அ.சா.பொ 1 ஐ வைத்து அ.சா 1 ன் கழுத்தில் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிய வருகிறது.

(xi) . இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா 10 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்து 31.12.2012 ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 324, 506(ii) இதசவில் இருந்து சட்டப்பிரிவுகளான 294(பி), 324, 506(ii), 307 இதச வாக சட்டப்பிரிவுகளை சேர்த்து அ.சா.ஆ 7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து எதிரியை தேடி வந்த நிலையில் 31.12.2012 ம் தேதி மதுரை JM 6 நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி பின்னர் காவலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா 7 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகளான 294(பி), 324, 506(ii) , 307 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(xii) ஆனால் எதிரி தரப்பில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும், சம்பவ இடத்தில் வைத்து அ.சா.பொ 1 ஐ கைப்பற்றவில்லை என்றும் , இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றும் , இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது

தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறி வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால், அதை நிரூபிக்க எதிரி தரப்பில் எந்தவொரு ஆள் சாட்சியமோ ஆவண சாட்சியமோ முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை.

16. எனவே, மேற்கண்டவாறு அரசு தரப்பு முன்நிறுத்தப்பட்டு அ,சா 1 முதல் 10 வரையான சாட்சிகளின் சாட்சியங்களையும், அசா 1 முதல் 08 வரையான சான்று ஆவணங்களையும், எ.சா.ஆ 1,2 ஐயும், அ.சா. பொ 1, 2 ஐயும் வைத்து பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டை அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**17.** இவ்வழக்கின் எதிரியை சட்டப்பிரிவு 307 இ.த.ச வின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், மேற்படி குற்றங்களுக்காக எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து கு.வி.மு.ச பிரிவு 235(2) பிரிவின் கீழ் வினவியபோது, அவர் கீழ்கண்டவாறு பதில் அளித்துள்ளார் . அதை அவ்வாறே நீதிமன்றம் பதிவு செய்து கொண்டது.

**எதிரி அவருக்கு குறைந்த தண்டனை வழங்கவேண்டும் என்றும், மேலும், அபராதம் மட்டுமே விதிக்க வேண்டும் என்றும் கோரினார் அவரின் கோரிக்கை பதிவு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு (ஒப்பம் – கிருஷ்ணசாமி ) கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கப்பட்டது.**

18. முடிவாக ,எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட பிரிவு 307 இதச வின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் போதுமான சாட்சிய சான்றாவணங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளது அதன் படி , **மேற்படி, இதச பிரிவான 307 இதச வின் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும் ரூ. 1,000 /– அபராதம் விதித்தும், கட்ட தவறினால் சாதாரண சிறை தண்டனை விதித்தும் , குவிமுச பிரிவு 235(2) ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

19. எதிரி ஏற்கனவே, 31.12.2012 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 31.12.2012 தேதி முதல் 21.01.2013ம் தேதி வரை நீதிமன்ற காவலில் இருந்துள்ளார். அவ்வாறு எதிரி நீதிமன்ற காவலில் இருந்த மொத்தம் 22 நாள்கள் இவ்வழக்கின் தண்டனை காலத்திலிருந்து கழித்து கொள்ள வேண்டியது என்று கு.வி,.மு.ச. பிரிவு 428 ன் படி உத்தரவிடப்படுகிறது.

**20. வழக்கு சொத்துக்கள் பற்றிய உத்தரவு :**

இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யப்பட்ட CP.No. 01/2021 Dt: 26.10.2021 ல் கண்ட வழக்கு சொத்துக்களான

1. அ.சா.பொ 1 ஆன அருவாள் ( சுமார் 12 செ.மீ கைப்பிடியும் 37 செ.மீ கூர்மையான பகுதியும் கொண்ட மொத்தம் 49 செ.மீ ) –1 ஐ இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், அல்லது மேல் முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னரோ அல்லது மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவு படியோ அழிக்கப்பட வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்

**அரசுதரப்பு சாட்சிகள் (முதல் நிலை சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம்) :–**

| விசாரணை செய்யப்பட்டவர்களின் பெயர் | | முதல் விசாணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| அ.சா.1. | திரு. சரவணன் | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.2. | திரு. மரியாலியோ வில்பர்ட் | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.3. | திரு. ஆரோக்கியராஜ் | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.4 | திரு. சதீஷ் | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.5 | திரு. பூபாலன் | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.6 | திரு. அந்தோணிசாமி | 27.10.2021 | 27.10.2021 |
| அ.சா.7 | திரு. விஸ்வாசம் | 21.12.2021 | 21.12.2021 |
| அ.சா.8 | திருமதி. சுகந்தி | 19.03.2025 | 19.03.2025 |
| அ.சா.9 | திரு. பெட்டிஇசாக் | 24.04.2025 | 24.04.2025 |
| அ.சா.10 | திரு. முரளி | 18.09.2025 | 18.09.2025 |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | படிவம் 91 |

**அரசுதரப்பு சான்று பொருள் C.P.No.01/2021 :–**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | அருவாள் |

**எதிரி தரப்பு சாட்சிகள் : – இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | ட்ரிப்சீட் – நகல் |

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.2 | எதிரி எடுத்து வந்த வாகனத்தின் புகைப்படங்கள் – 3 எண்ணிக்கை |

**<u>எதிரி தரப்புசான்று பொருள்கள் :</u> – இல்லை**

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

**கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,**
**ஒசூர்.**

**<u>1. குறிப்பு : -</u> பணத்தண்டனை ரூ. 1,000 ஐ எதிரி நீதிமன்றத்தில் செலுத்தி விட்டார்.**

**<u>2. குறிப்பு:–</u>**

1. வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச.437(ஏ) பிரிவின்கீழான பிணைப்பத்திரத்தைத் தவிர மற்ற பிணைப்பத்திரங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. மூன்று தினங்களுக்கு மேல் எந்த ஒரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை.
5. சொத்துப்பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
6. தீர்ப்புரையின் நகல் கூடுதல் அரசு வழக்குரைஞருக்கு வழங்கப்பட்டது.

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur

**கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,**
**ஒசூர்.**